**ஜூன் – 23**

# TNPSC துளிகள்

- ❖ கடவுச் சீட்டிற்கு விண்ணப்பிக்கும் முன் ஒரு பெண் தனது கணவரின் அனுமதியைப் பெற்று அவரது கையொப்பத்தைப் பெற வேண்டிய அவசியமில்லை என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- ❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, சுமார் 120 கிலோ மீட்டர் மற்றும் 300 கிலோ மீட்டர் என்ற நீட்டிக்கப் பட்ட ஏவுதல் வரம்புகளுடன் கூடிய பினாகா ஏவுகல அமைப்பின் புதிய வகைகளை விரைவில் தயாரிக்கத் தொடங்க உள்ளது.
- ❖ 3.5 பில்லியன் பயனர் தரவுகள் திருடப்பட்ட இணையதள வரலாற்றில் இது வரையில் பதிவாகாத மிகப்பெரியத் தகவல் மீறல் நிகழ்வு ஒன்று இணைய வெளிப் பாதுகாப்பு நிபுணர்களால் கண்டறியப் பட்டுள்ளது.
- ❖ இந்தியாவில் தொலைத்தொடர்பு சந்தாதாரர் பரவலானது, இரண்டாவது முறையாக 1.2 பில்லியன் பயனர் எண்ணிக்கையினைத் தாண்டி, 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் 1,201.22 மில்லியன் எண்ணிக்கையினை எட்டியுள்ளது.
- ❖ இந்தியாவின் முதல் 3-நானோமீட்டர் அளவிலான சில்லு வடிவமைப்பு மையங்கள் நொய்டா மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களில் தொடங்கப் பட்டுள்ளன.
- ❖ 2025 ஆம் ஆண்டு தெற்காசிய WAN-IFRA எண்ணிம ஊடக விருதுகள் விழாவில், பல்வேறு விருது பிரிவுகளில் 10 விருதுகளை வென்ற தி இந்து பத்திரிக்கை , 2025 ஆம் ஆண்டின் எண்ணிம ஊடக விருதுகளின் சாம்பியன் என்ற பட்டத்தினை வென்றது.
- ❖ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் "லக்சயா குப்பை நிரப்பு தளமற்ற பகுதி" திட்டத்தின் கீழ், குஜராத்தின் ராஜ்கோட் பல தசாப்தங்களாக இருந்த குப்பை கொட்டும் இடத்தினை சுமார் 20 ஏக்கர் பசுமையான நகர்ப்புற காடாக மாற்றி உள்ளது.
- ❖ பிரான்சில் நடைபெற்ற சமீபத்திய ஐக்கிய நாடுகள் சபையின் பெருங்கடல் மீதான ஒரு மாநாட்டின் (UNOC) போது, புவியின் 56 நாடுகள் தேசிய அதிகார வரம்பிற்கு அப்பால் உள்ள பல்லுயிர்ப் பெருக்கம் (BBNJ) ஒப்பந்தத்தினை அங்கீகரித்தன.
  - ○ இது சட்டப்பூர்வமாகப் பிணைக்கப்படுவதற்கு 60 நாடுகளின் ஒப்புதல்கள் தேவை ஆகும்.

# தேசியச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டு இடைத் தேர்தல்களில் அறிமுகப்படுத்தப்படும் முக்கியப் படைப்பாக்கங்கள்

- ❖ குஜராத், கேரளா, மேற்கு வங்காளம் மற்றும் பஞ்சாப் ஆகிய நான்கு மாநிலங்களில் உள்ள ஐந்து சட்டமன்றத் தொகுதிகளில் இடைத்தேர்தல்கள் நிறைவடைந்தன.
- ❖ இதில் மிகவும் முதன்முறையாக, அனைத்து வாக்குச் சாவடிகளின் நுழைவாயிலிலும் வாக்காளர்களுக்கு தங்களது கைபேசிகளைப் பாதுகாப்பான முறையில் ஒப்படைத்து செல்லும் வசதிகளை தேர்தல் ஆணையம் அறிமுகம் செய்துள்ளது.
- ❖ இதில் மேம்படுத்தப்பட்ட ECINET செயலியைப் பயன்படுத்தி, தலைமை அதிகாரிகள் ஒவ்வொரு இரண்டு மணி நேரத்திற்கும் ஒரு முறை வாக்குப்பதிவுத் தரவை நேரடியாக உள்ளிட வழி வகை செய்யப்பட்டது.
- ❖ முதல் முறையாக, சுமார் 100% வாக்குச் சாவடிகளில் இணையதள ஒளிபரப்பு நடத்தப்

பட்டது.

- ஐந்து தொகுதிகளில் ஒரு வாக்குச் சாவடி 24 மணி நேரமும் இணைய தள ஒளிபரப்புக் கண்காணிப்பின் கீழ் கண்காணிக்கப்பட்டது.
- இடைத்தேர்தலுக்கு முன்னதாக வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு மறு மதிப்பீட்டுத் திருத்தம் (SSR) நடத்தப்பட்டது.
- சுமார் 20 ஆண்டுகளில் முதல் முறையாக இந்த ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு உள்ளது.




## பாலினம் சார் நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீட்டுத் தகவல் மையம்




- மத்திய அரசானது, 'பாலினம் சார் நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீட்டுத் தகவல் மையம்' என்ற பெயரில் ஒரு வலை தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- 2014-15 ஆம் ஆண்டில் சுமார் 0.98 லட்சம் கோடி ரூபாயாக இருந்த பாலினம் சார்

நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் கடந்த 11 ஆண்டுகளில், நான்கரை மடங்கு அதிகரித்து 2025-26 ஆம் ஆண்டில் 4.49 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளன.

- இந்த மையம் ஆனது பாலினம் சார் நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான செயல்முறைகள் தொடர்பான அனைத்து தகவல்களின் எண்ணிமக் களஞ்சியமாகும்.

## முதலைகள் வளங்காப்பு திட்டத்தின் 50 ஆம் ஆண்டு நிறைவு




- இந்தியா தனது முதலைகள் வளங்காப்பு திட்டத்தினை 1975 ஆம் ஆண்டில் தொடங்கி இருந்தது.
- இந்தியாவானது இந்த திட்டத்தினை ஒடிசாவின் பிதர்கனிகா தேசியப் பூங்காவில் UNDP மற்றும் FAO ஆகியவற்றின் ஆதரவுடன் தொடங்கியது.
- இந்த முன்னெடுப்பானது தொடங்கி 50 ஆம் ஆண்டு நிறைவடைவதை இந்த ஆண்டு குறிக்கிறது.
- இந்தியாவில் கங்கை நீர் முதலை (கரியல்), உப்பு நீர் முதலை மற்றும் சதுப்பு நில முதலைகள் ஆகிய மூன்று முக்கிய வகை முதலை இனங்கள் காணப் படுகின்றன.
- மூன்று உள்நாட்டு முதலை இனங்களைக் கொண்டுள்ள ஒரே இந்திய மாநிலம் ஒடிசா ஆகும்.
- உலகளாவியக் கங்கை நீர் முதலை எண்ணிகையில் சுமார் 80% இந்தியாவில் உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை நோய் மேலாண்மை வழிகாட்டுதல்கள்

- கர்ப்ப காலத்தில் அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை நோயை (SCD) மேலாண்மை செய்வதற்கான அதன் முதல் உலகளாவிய வழிகாட்டுதலை உலக சுகாதார அமைப்பு (WHO) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த வழிகாட்டுதலில் ஃபோலிக் அமிலம் மற்றும் இரும்புச்சத்து ஊட்ட நிரப்பு உட்பட 20க்கும் மேற்பட்ட பரிந்துரைகள் உள்ளன.
- SCD பாதிப்பு உள்ள பெண்கள், பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பிற்கான வாய்ப்பு இல்லாதவர்களை விட சுமார் 4 முதல் 11 மடங்கு அதிகமான அளவிற்கு ஆபத்தினைச்


சந்திக்கின்றனர்.

- ❖ அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை நோய் என்பது ஒரு மரபணு வழி இரத்தக் கோளாறு ஆகும்.
- ❖ இது இரத்தச் சிவப்பணுக்களை மிகவும் இறுக்கமாக்கி அரிவாள் வடிவத்திலானதாக வடிவமைக்கிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## மீநிலை ஹீலியம் நட்சத்திரம் - A980




- ❖ பெங்களூருவில் உள்ள இந்திய வானியற்பியல் நிறுவனத்தின் (IIA) அறிவியலாளர்கள், நட்சத்திரத்தில் மீநிலை ஹீலியம் - A980 இருப்பதை அடையாளம் கண்டுள்ளனர்.
- ❖ இத்தொலைதூர நட்சத்திரம் A980 ஆனது, ஒபியுச்சஸ் விண்மீன் திரளில் தோராயமாக 25,800 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- ❖ ஆரம்பத்தில் இது ஹைட்ரஜன் குறைபாடுள்ள கார்பன் (HdC) நட்சத்திரம் என்று நம்பப் பட்டது.

- இந்த மர்மமான வானியல் அமைப்பானது தற்போது மீநிலை ஹீலியம் (EHe) கொண்ட நட்சத்திரமாக மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.
- மேலும், இந்த வகை நட்சத்திரத்தில் இதற்கு முன்பு கண்டறியப்படாத, அயனியாக்கம் செய்யப்பட்ட ஒற்றை ஜெர்மானியம் (Ge II) என்ற ஓர் அரிய உலோகத் தனிமம் இருக்கச் செய்வதற்கான ஆதாரங்களை அவர்கள் கண்டறிந்தனர்.
- இது ஒரு EHe நட்சத்திரத்தில் ஜெர்மானியம் இருப்பது உறுதி செய்யப்பட்ட முதலாவது கண்டறிதல் ஆகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## நிலக்கரிச் சுரங்கங்களில் இருந்து சூரிய சக்தி திறன்




- இந்திய நாடானது, செயல்பாடுகள் நிறுத்தப்பட்ட நிலக்கரிச் சுரங்கங்களில் இருந்து சூரிய சக்தியை உற்பத்தி செய்யும் திறனை மிகவும் அதிகளவில் கொண்ட உலகின் நான்காவது நாடாக உள்ளது.
- 63 பயன்படுத்தப்படாத சுரங்கத் தளங்கள் ஒரு சேர சுமார் 27.11 ஜிகாவாட் (GW) சூரிய சக்தியை உற்பத்தி செய்ய முடியும்.
- இது நாட்டின் தற்போதைய நிறுவப்பட்ட சூரிய சக்தி திறனில் சுமார் 37 சதவீதத்திற்குச் சமமாகும்.
- தெலுங்கானா, ஒடிசா, மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கர் ஆகியவை மூடப்பட்ட அல்லது விரைவில் மூடப் படவுள்ளச் சுரங்கங்களில் இருந்து அதிக நிலம் கிடைக்கப் பெறும் வாய்ப்புடன் கூடிய முதல் 20 உலகளாவியப் பிராந்தியங்களில் அடங்கும்.
- மற்ற 3 முன்னணி நாடுகளானது ஆஸ்திரேலியா, இந்தோனேசியா மற்றும் அமெரிக்கா ஆகியனவாகும்.


### தமிழ்நாட்டில் டூம்ஸ்டே மீன் (துடுப்பு மீன்)




- ஜப்பானிய நாட்டுப்புறக் கதைகளில் தீங்கின் ஒரு அறிகுறியாக 'டூம்ஸ்டே மீன்' என்று குறிப்பிடப்படும் ஓர் அரிய வகை துடுப்பு மீன் ஆனது (ஓர்ஃபிஷ்) சமீபத்தில் தமிழகக் கடற்கரையில் பிடிபட்டது.
- தமிழ்நாட்டில் பிடிக்கப்பட்ட இந்த உயிரினம் ஆனது ஒரு பெரிய ஓர்ஃபிஷ் (ரெகலேகஸ் க்ளெஸ்னே) ஆகும்.
- இது சுமார் 36 அடி (11 மீட்டர்) வரை நீளம் வரை வளரக் கூடிய உலகின் மிக நீளமான எலும்புகளையுடைய மீன் ஆகும்.
- அவை மிகப் பொதுவாக கடலின் மேற்பரப்பிற்கு அடியில் 660 முதல் 3,300 அடி ஆழம் வரையிலான இடை (மீசோபெலஜிக்) மண்டலத்தில் வாழ்கின்றன.
- ஜப்பானிய நாட்டுப்புறக் கதைகளின்படி, இந்த ஓர்ஃபிஷ் மீன்கள் 'ரியுகு நோ சுகாய்', அதாவது 'கடல் கடவுளின் தூதர்' என்று அழைக்கப் படுகின்றன.

## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### பட்டினி நிலை அதிகம் காணப்படும் பகுதிகள் 2025




- ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) மற்றும் உலக

உணவுத் திட்டம் (WFP) ஆகியவை "பட்டினி நிலை அதிகம் காணப்படும் பகுதிகளின் பட்டியல்: கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை குறித்த FAO-WFP முன் எச்சரிக்கை" என்ற ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளன.

- சூடான், தெற்கு சூடான் மற்றும் மாலி ஆகிய ஆப்பிரிக்க நாடுகள் அதிக கவலைக்கு உரிய வகையில் பட்டினி நிலை அதிகம் உள்ள உலகின் ஐந்து இடகள் ஆகும்.
- அதற்கு மிக எதிர்மாறாக, எத்தியோப்பியா, கென்யா, லெபனான், லெசோதோ, மலாவி, மொசாம்பிக், நமீபியா, நைஜர், சாம்பியா மற்றும் ஜிம்பாப்வே ஆகியவை இனி பட்டினி நிலை அதிகம் உள்ள பகுதிகளின் பட்டியலில் இல்லை.

# மாநிலச் செய்திகள்

## NFWPIS உடனான புரிந்துணர்வு ஒப்பந்தம்




- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் (MoA&FW) ஆனது, 'Agri Stack தளம்: Turning Data into Delivery' குறித்த தேசிய மாநாட்டை ஏற்பாடு செய்தது.
- மகாராஷ்டிரா, கேரளா, பீகார் மற்றும் ஒடிசாவுடன் சில புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், தேசிய விவசாயிகள் நலத் திட்ட அமலாக்கச் சங்கத்துடன் பொதுத்துறை வங்கிகள் கூட்டணியும் இந்த நிகழ்வில் கையெழுத்தாகின.
- விவசாயிகள் பதிவேடுடன் இணைக்கப்பட்ட அங்கீகாரம் மூலம் கடன் சேவைகளுக்கு தடையற்ற எண்ணிம அணுகலைச் செயல்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ஸ்கைட்ராக்ஸ் 2025 விருதுகள்


- ஸ்கைட்ராக்ஸ் உலக விமான நிறுவன விருதுகள் ஆனது, "விமானப் போக்குவரத்துத் துறையின் ஆஸ்கார் விருதுகள்" என்று பரவலாகக் கருதப்படுகின்றன.
- 2025 ஆம் ஆண்டில் உலகின் சிறந்த மற்றும் குறைந்த கட்டணத்திலான விமான சேவை நிறுவனங்களில் இந்தியாவின் இண்டிகோ ஏர்லைன்ஸ் விமான நிறுவனம் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- மேலும் பிராந்திய ரீதியாக, 2025 ஆம் ஆண்டிற்கான தெற்காசியாவின் சிறந்த விமான நிறுவனம் மற்றும் மிகவும் குறைந்த அளவு கட்டணத்திலான ஒரு விமான நிறுவனம் ஆகியவற்றுக்கான தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

❖ கத்தார் ஏர்வேஸ் நிறுவனமானது 2025 ஆம் ஆண்டிற்கான உலகின் மிகவும் சிறந்த ஒரு விமான நிறுவனமாக அறிவிக்கப் பட்டதோடு ஒன்பதாவது முறையாக மீண்டும் இந்தப் பட்டத்தைப் பெற்றுள்ளது.




# முக்கிய தினங்கள்

## ASEAN டெங்கு தினம் 2025 - ஜூன் 15




❖ இந்த தினமானது 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற 10வது ASEAN சுகாதார அமைச்சர்கள் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

❖ இது பாதிப்பு மற்றும் உயிரிழப்பு ஆகிய இரண்டையும் குறைப்பதை ஒரு நோக்கமாகக் கொண்ட மிகவும் விரிவான தடுப்பு, கட்டுப்பாடு மற்றும் மேலாண்மை உத்திகள் மூலம் டெங்குவை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ டெங்கு வைரஸ் ஆனது முதன்மையாகப் பாதிக்கப்பட்ட கொசுக்கள் கடிப்பதன் மூலம் மனிதர்களுக்குப் பரவுகிறது.

❖ இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "ASEAN United: Zero dengue deaths a future we build together" என்பதாகும்.


## சர்வதேச வீட்டுப் பணியாளர்கள் தினம் 2025 - ஜூன் 16




- இந்தத் தினமானது வீட்டுப் பணியாளர்கள் உடன்படிக்கை, 2011 என்பது (எண். 189) ஏற்றுக் கொள்ளப் பட்ட ஆண்டு நிறைவினைக் குறிக்கிறது.
- வீட்டுப் பணியானது உண்மையான வேலையாக அங்கீகரிக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும்.
- உலகெங்கிலும், சுமார் 75 மில்லியனுக்கும் அதிக அளவில் வீட்டுப் பணிப் பெண்கள் வீடுகள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் கட்டமைப்பில் ஆதரவினை வழங்கி வருகின்றனர்.
- பராமரிப்புத் தேவைகள் அதிகரித்து வருவதால், 2030 ஆம் ஆண்டிற்குள் 2.3 பில்லியன் மக்களுக்குப் பராமரிப்பு சேவைகள் தேவைப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Recognizing Care, Advancing Dignity and Rights for the Domestic Workers" என்பதாகும்.

## உலக முதலைகள் தினம் 2025 - ஜூன் 17

- முதலைகள் மற்றும் முதலைகளின் வளங்காப்பு குறித்த ஒரு பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- இது பெலிஸ் நாட்டில் உள்ள முதலை ஆராய்ச்சி கூட்டாண்மையின் ஒரு முன்னெடுப்பு ஆகும்.
- 2025 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்த ஒரு நிகழ்வு ஆனது, இந்தியாவின் முதலை வளங் காப்பு திட்டத்தின் 50வது ஆண்டு நிறைவையும் நினைவு கூர்ந்தது.
- 3 முக்கிய வகை முதலைகள் இந்தியாவில் காணப்படுகின்றன,
    - உப்பு நீர் முதலை (குரோகோடைலஸ் போரோசஸ்),
    - சதுப்பு நில வாழ் முதலை (குரோகோடைலஸ் பலஸ்ட்ரிஸ்), மற்றும்
    - கங்கை நீர் முதலை - கரியல் (காவியலிஸ் கேஞ்செடிகஸ்).
- மூன்று உள்நாட்டு முதலை இனங்களைக் கொண்ட ஒரே மாநிலம் ஒடிசாவாகும்.




# இதரச் செய்திகள்

## NIXI நிறுவனத்தின் 20 வது ஸ்தாபன ஆண்டு நிறைவு

- இந்தியத் தேசிய இணைய பரிமாற்ற (NIXI) நிறுவனமானது, சமீபத்தில் அதன் 20 ஆம் ஆண்டு ஸ்தாபன தினத்தைக் கொண்டாடியது.
- 2003 ஆம் ஆண்டில் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் (MeitY) கீழ் இது அமைக்கப்பட்டது.
- இது தற்போது நாடு முழுவதும் சுமார் 77 இணையதளப் பரிமாற்ற மையங்களை (IXPs) இயக்குகிறது.
- இது தாமதத்தைக் குறைத்தல், வேகத்தை மேலும் அதிகரித்தல் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் உள்நாட்டுப் பரிவர்த்தனைகளை இந்தியாவின்

எல்லைகளுக்குள் மேற்கொள்ள உதவுகிறது.

## NAKSHATRA மையம்





- இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை (ICMR) புனேவில் உள்ள அதன் தேசிய நச்சுயிரியியல் கல்வி நிறுவனத்தில் (NIV) அதன் முதல் அதிஉயர் செயல்திறன் கொண்ட கணினி மையத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இதற்கு NAKSHATRA என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது மேம்படுத்தப் பட்ட தரவுச் சேமிப்பைச் செயல்படுத்தி, மரபணு ஆராய்ச்சிக்கான பாதையினை மேம்படுத்துகிறது.
- இது சிறந்த வைரஸ் மரபணு கண்காணிப்புத் திறன் மற்றும் எதிர்காலத்தில் தோன்ற உள்ள எந்தவொரு தொற்றுநோய்க்குமான தேசியத் தயார்நிலையை உறுதி செய்யும்.
- பிரதான் மந்திரி ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்புத் திட்டத்தின் (PMABHIM) கீழ் இது உருவாக்கப்பட்டது.

## மகம் நிலக்கரி சுரங்கத்தின் புதைபடிவ கண்டுபிடிப்புகள்

- அசாம் மாநிலத்தில் மகம் என்ற நிலக்கரிச் சுரங்கத்தின் நிலக்கரிச் படுகைகளில் 24 மில்லியன் ஆண்டுகள் பழமையான புதைபடிவமான இலைகளை அறிவியலாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.
- அவை நோத்தோபீஜியா என்ற வகை தாவர இனத்தின் உலகின் பழமையான பதிவாக அடையாளம் காணப்பட்டுள்ளன.
- இந்தப் புதைபடிவமான இலைகள் என்பவை பிற்கால ஒலிகோசீன் சகாப்தத்திற்கு (24–23 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு) முந்தையவையாகும்.

- அவை இன்று மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படும் நவீன நோத்தோபீஜியா இனங்களுடன் (பேச்சேறு மரம்) ஒரு குறிப்பிடத் தக்க ஒற்றுமையைக் கொண்டுள்ளன.
- குறிப்பிடத்தக்க வகையில், தற்போது இந்த நோத்தோபீஜியா இனமானது வட கிழக்கு இந்தியாவில் வளரவதில்லை.
- இந்தக் கண்டுபிடிப்புகள் ஆனது, பிற்கால ஒலிகோசீனின் காலத்தின் போது, அசாமில் நோத்தோபீஜியாவின் வளர்ச்சிக்கு ஆதரவாக அமைந்த ஒரு வெப்பமான, ஈரப்பதமான பருவ நிலை காணப்பட்டது என்ற தகவலை வெளிப்படுத்தின.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★